# சித்தர்களும், பக்தி மார்க்கமும்

# Siddhas and the Path of Devotion

*முனைவர் கு. சந்திரன்*
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
மன்னர் சரபோசி அரசு கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்

**Dr. K. Chandran**
*Assistant Professor*
*Department of Tamil*
*Raja Serfoji Government College (Autonomous)*
*Thanjavur*

## ஆய்வுச் சுருக்கம்

*தமிழ் இலக்கிய வரலாற்றில் சித்தர் இலக்கியங்களுக்குச் சிறப்பான இடம் உண்டு. ஆனால் சித்தர்களுடைய நிலை இன்னும் விளங்காத புதிராகவே உள்ளது. தெரிந்தவரையில், ஈண்டுத் தரப்பெறுகின்றது. சித்தி எய்தியவர்கள், பேரின்பம் சித்திக்கப் பெற்றவர்கள் சித்தவர்கள். கடவுளைக் காணமுயல்பவர் பக்தர் கண்ட மாத்திரத்தில் முக்தி பெறுவதாகக் கொள்வது மரபு. ஆனால் பக்தி நெறி அன்றி வேறு நெறியால் இறைவனைக் கடவுளைக் கண்டு தெளிந்து. இருவினையொப்பு நிகழ்ந்து மலபரிபாகம் ஏற்படும் வரை உடலோடு உலாவுவோர் சித்தர். பக்தர் சித்தர் பலர் ஏத்தும் பரமன் பழையனூர் மேய, அத்தன் ஆலங்காடன் (சுந்.தேவா.7.52.11) என்ற சுந்தரர் தேவாரம் இக்கருத்துக்கு அரண் செய்யும். திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை செல்மின்கள் (திருவா. திருப்படையெழுச்சி 2 (614) என்பது திருவாசகம்.*

***முக்கியச்சொற்கள்:*** *இலக்கயம், சித்தர் இலக்கயம், பக்தி மார்க்கம், இரசவாதம், திருவிளையாடற்புராணம்.*

## Abstract

*Siddha literature has a special place in the history of Tamil literature. But the position of the Siddhas is still a mystery. As far as is known, it is given. Those who have attained siddhi and those who have attained bliss are siddhas. He who tries to see God is a devotee; It is customary to assume that one attains liberation at the sight of it. But by a path other than devotional, god became clear. Siddhars are those who walk with the body until the bifurcation takes place and the malaparibhagam occurs. Many devotees of Siddhas etham Paraman Pazhayanur Meya, Athan Alangadan (Sun.Deva.7.52.11) sundarar thevaram of Sundarar will fortify this idea. Tindirar Siddhas are the kadaikuzhai selmins (Thiruva. Thirupadaizhuchi 2 (614) is thiruvasagam.*

***Keywords:*** *Tamil Literature, Siddha Literature, Bhakti Marga, Alchemy, Thiruvilayathar Puranam*

**Citation**

Chandran, K. "Siddhas and the Path of Devotion." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 1, 2023, pp. 83–101.

**முன்னுரை**

*அட்டமான சித்தி கைவந்தவர்கள் சித்தர்கள், இரசவாத வித்தை வல்லவர்கள் சித்தர்கள், யோகசித்தி பெற்றவர்கள் சித்தர்கள் என்பன போன்ற வெவ்வேறு கருத்துக்களும் வழங்குகின்றன. அட்டமாசித்திகள் திருமந்திரத்திலும் (திருமந்திரம் - மூன்றாம் தந்திரம் 11, அட்டமாசித்தி 32-43) தேவாரத்திலும் (தேவாரம் - 3.36.11 கூறப்பெறுகின்றன. மதுரையில் சோம சுந்தரக்கடவுள் எல்லாம் வல்ல சித்தராக வந்து கல்யானைக்குக் கரும்பை அருத்தியது இங்குக் கூறிய மூன்றிலும் முதல் வகையைச் சார்ந்தது. இங்கு அட்டமா சித்திகளின் விளக்கம் அறியப்பெறுகின்றது. இவ்வாறு இன்று சில சித்திகள் கைவரப் பெற்றோர் நாட்டில் இருப்பவர்களாக நாம் கேள்விப் படுகின்றோம். இனி திருப்பூவணத்திலர் பொன்னணையாளுக்காகச் சிவபெருமான் போந்து இரசவாதம் செய்த திருவிளையாடல் இரண்டாவது வகையின் பாற்படும்.*

*சிவபெருமானையே எல்லாம் வல்ல சித்தராக்கித் திருவிளையாடற்புராணம் காட்டியுள்ள கதைகளைக் கொண்டு சித்தர்களின் பெருமைகளை உணரலாம்.*

*சித்தர்கள் உலகெங்கும் உள்ளனர். எல்லாக் காலங்களிலும் எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். அவர்கள் உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவானவர்கள் சாதி சமய வேறுபாடு அற்றவர்கள். நாடு, மொழி, இனம் ஆகிய குறுகிய எல்லைகளை கடந்தவர்கள். அவர்கள் எங்கும் எப்போதும் தோன்றி, மக்கள் இன்புற்று வாழ நல்வழி காட்டுபவர்கள். ஆன்மநேய ஒருமைப்பாட்டை வளர்ப்பவர்கள். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் (திருமந் -5, பாயிரம் திருமூலர் வரலாறு - 13 (85) என்பதும், ஒன்றே குலம் ஒருவனே தேவன்) (மேலது ஏழாம் தந்திரம் - இதோபதேசம் - 3 (2104) என்பதும் அவர்தம் குறிக்கோள்கள் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியாதவர்கள்.*

*தென்னாட்டில்: தமிழ்நாட்டில் சித்தர் திருமூலரோடு தொடங்குகின்றது. (கி.பி 5-6 ஆம் நூற்றாண்டு)''மூலன்மரபு'' என்பது தாயுமானவர் வாக்குமூலருக்கு முன்பு சிலர் இருந்திருக்கலாம். அவர்களை நாம் அறியக்கூடவில்லை. இவரைச் சித்தர் என்று சொல்லுவதற்குக் காரணம் இவர் யோக சமாதியில் மூவாயிரம் ஆண்டுகள் இருந்து ஆண்டுக்கொரு மந்திரம் பாடினார் என்று மனித இயல்பைக் கடந்த செயலைக் கருதியதேயாகும். திருமூலர் குறிப்பிடும் சித்தர்கள் நந்தி அருள் பெற்ற நாதர்கள் - சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமார், சிவயோகமா முனி. பதஞ்சலி. வியாக்கிரக பாதர், திருமூலர் ஆகிய எண்மர். (திருமந்திரம் - பாயிரம் குருபாரம்பரியம் பாடல் 1 (67).)*

*பதினெண் சித்தர்கள்: சித்தர்கள் பதினெண்மர் என்று கூறுவது மிகவும் பழமையான வழக்கு. அகத்தியர் முதலே இந்தச் சித்தர் பட்டியல் தொடங்குகின்றது. இவர்கள் அகத்தியர், இடைக்காடர், உரோமாமுனி, கமலமுனி கூன்கண்ணர். கூர்மமுனி. கயிலாய நாதர். கொங்கணர், கோரக்கர், சட்டைமுனி, சுந்தரானந்தர், திருமூலர், நந்தி, பிரமமுனி, பிண்ணாக்குமுர்,போகர், மச்சமுனி, வாசசனி என்போர் என்று சொல்வது ஒரு வரிசை. இவர்களுள் பல பெயர்களை நீக்கி சண்டேசர், கருவூர் சித்தர், திருவள்ளுவர், சிவவாக்கியர், மார்க்கண்டர், வால்மீகி, இராமதேவர், காகபுசுண்டர், சுப்பிரமணியர், சூரியானந்தர், பட்டினத்தார், பத்திரகிரியார், சகதீசர், தேரையர், யூகி, தருமமுனி முதலான பல பெயர்கள் சொல்லுவதுமுண்டு. இந்த வரிசையில் பல பெயர்கள் பிற்காலச் சேர்க்கை காலத்தால் பின்வந்த தலைமுறையினர்*

*முன்னோர் பெயரை வைத்துக் கொள்வதுமுண்டு. அகத்தியர், திருமூலர், திருவள்ளுவர் என்ற பெயர்களை இவ்வாறு கருத வேண்டும்.*

*இந்த சித்தர்கள் பெயரால் யோகம், ஞானம், மருத்துவம், சோதிடம், மந்திரம், தந்திரம் இவையெல்லாம் சேர்ந்து வழங்கப்பெறும். ஏனாதி சித்தர், காளைச் சித்தர், கம்பளிச் சித்தர், சடாதாரச்சித்தர் என்றெல்லாம் இப்பட்டியல் வளர்ந்து கொண்டே போவதைக் காணலாம்.*

**சித்தர் செய்த பணிகள்**

*சித்தர்கள் தம்மை உயர்த்திக் கொண்டதோடு உலக மக்களையும் உயர்த்துவதற்கு நற்பணிகள் பல மேற்கொண்டனர்.*

*காயசித்தி பெறுவது: இது இந்த உடலை அழியாது பாதுகாத்து மரணத்தை வெல்வதாகும்.*

***கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்***
***ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு*** *(269)*

*என்ற திருக்குறளையும் (தவம் அதிகாரம்) ஈண்டுக் கருதலாம். இப்படிப்பட்ட முயற்சி தமிழ் நாட்டில் மட்டுமன்றி உலகமெங்குமே நிகழ்ந்து வந்துள்ளது. சென்ற நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்த இராமலிங்க அடிகள் இச்சித்தியில் ஈடுபட்டிருந்தார் என்றும் அவருடைய மறைவும் இந்த முயற்சியில் ஒர் அங்கமே என்றும் பல பெரியோர் கருதுவர் காயகற்பம் தேடிய ஒருவரை ஆங்கிலக் கவிஞரான இராபர்ட் பிரெளனிங் தம் கவிதை யொன்றில் குறிப்பிட்டுள்ளார் அளகேசன் நிகராக அம் பொன்மிக வைத்த பேரும் நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர். நெடுநாள் இருந்த பேரும் நிலையாகவே இன்னும் காயகற்பம் தேடி நெஞ்சு புண்ணானவர் (தா.ப : பரிபூரணானந்தம் -10) என்பது தாயுமான அடிகளின் அமுதவாக்கு.*

*கூடுவிட்டு கூடு பாய்தல் என்பது சித்தர் செயல்களுள் ஒன்று. அருணகிரிநாதர் மனிதக் கூட்டைவிட்டுக் கிளிக் கூட்டினுள் புகுந்தார் என்ற ஒரு வரலாறு உண்டு. ஆனால் சித்தர்கள் பெயர்களுள் இவர் பெயரை எவரும் சேர்த்ததில்லை. இதனால் சித்தர்கள் தொகை வழக்கு இவர் காலமாகிய 15 ஆம் நூற்றாண்டுக்கு முன்னதாகவே அமைந்துவிட்டது என்று கருதலாம்.*

**பதினெண் சித்தர்கள்**

*இவர்கள் யாவர் என்ற ஆராய்ச்சியுள் புகாமல் சம்பிரதாயமாக அறியப்பட்டவர்களை மட்டிலும் கண்டுக் காட்டுவேன்.*

**சிவவாக்கியர்**

*தமிழ்நாட்டில் வாழ்ந்த யோக சித்தர்களுள் ஒருவர் சித்தர்களுள் தலைசிறந்தவர். (பதினான்காம் நூற்றாண்டு (பிற்பகுதி) இவர்பற்றிய வரலாறு எதுவும் தெரியவில்லை. திருமூலரின் திருவிளக்காகத் தோன்றவில்லை. தாயுமான அடிகளால் குறிப்பிடப் பெறும் பெருமை பெற்றவர். இவர் பாடல்களில் வடசொற்கள் அதிகம். பேச்சு நடையும் மரூஉ மொழியும் மிகுதி சில இடங்களில் எதுகையைக் கவனியாமல் சந்த ஒட்டத்திற்கே முக்கியத்துவம் தருபவர்.*

*வட்டமான வட்டிலே*
*வளர்ந்தெழுந்த அம்புலி (183)*
*மூலமாம் குளத்திலே*
*முளைத்தெழுந்த கோரையை (153)*
*நாலொடாறு பத்துமேல்*
*நாலும் மூன்றும் இட்டபின் (172)*

உருவ வழிபாட்டைக் கடியவர். இதனை விளக்கப் பல பாடல்கள் உள்ளன.

*கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?*
*கோயிலும், மனத்துளே குளங்களும் மனத்துளே!*
*செங்கலும், கருங்கலும் சிவந்த சாதிலிங்கமும்*
*சிவந்த சாதிலிங்கமும் செம்பிலும் தராவிலும்*
*சிவன் இருப்பன் என்கிறீர்*

என்பவை காண்க. இதற்கு முத்தாய்ப்பான ஒரு பாடல்.

*நட்டக்கல்லைத் தெய்வம் என்று*
*நாலுபுட்பம் சாத்தியே*
*சுற்றிவந்து முன்முணென்று*
*சொல்லுமந்திரம் ஏதடா?*
*நட்ட கல்லும் பேசுமோ*
*நாதன் உள் இருக்கையில்!*
*கறிச்சுவை அறியுமோ!*

**சிவபெருமான் இருப்பிடம்**

அவன் எங்கும் இருப்பவன் கோயில் குளம் முதலியவற்றைத் தேடிப்போக வேண்டா. அவன் நம்முளே இருக்கின்றான் என்பதை உணருமாறு ஓதுகின்றார்.

*தீர்த்தலிங்க மூர்த்தி என்று தேடி ஓடும் தீதரே*
*தீர்த்தலிங்கம் உள்ளில் நின்ற சீவனைத் தெளியுமே*
*தீர்த்தலிங்கம் உம்முளே தெளிந்து காண வல்லீரேல்*
*தீர்த்தலிங்கம் தான் அதாயச் சிறந்ததே சிவாயமே*
*காண வேண்டும் என்றுநீர் கடல் மலைகள் ஏறுவீர்*
*ஆணவம் அதல்லவோ அறிவில்லாத மாந்தரே?*
*வேணும் என்று அவ்வீசர்பாதம் மெய்யுளே தரிப்பிரேல்*
*தாணுவாக நின்ற சீவன் தான் சிவம் அதாகுமே*

**சாதி வேற்றுமை**

இதனை மிகவும் கடிந்து சாடுகின்றார்.

*பறைச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா?*
*இறைச்சி தோல் எலும்பினும் இலக்கிமிட்டு இருக்குதோ?*
*பறைச்சிபோகம் வேறதோ? பணத்தி போகம் வேறதோ?*
*பறைச்சியும் பணத்தியும் பகுத்து பாரும் உம்முளே! (39)*

*சாதியாவது ஏதடா? சலம் திரண்ட நீரெலாம்*
*பூதவாசல் ஒன்றலோ? பூதம் ஐந்தும் ஒன்றலோ?*
*காதில் வாளி காரைகம்பி பாடகம்பொன் ஒன்றலோ?*
*சாதிபேதம் ஓதுகின்ற தன்மை என்ன தன்மையோ? (46)*

*மேதியோடு ஆவுமே விரும்பியே புணர்ந்திடில்*
*சாதிபேத மாம் உருத்தரிக்கும் ஆறு போலவே*
*வேதம் ஓதுவானுடன் பறைச்சி சென்று மேவிடில்*
*பேதமாய்ப் பிறக்கிலாத வாறதென்ன பேசுமே (461)*

**பட்டினத்தார்**

*தமிழ் இலக்கிய வரலாற்றில் இரண்டு பட்டினத்தார்கள் காணப்பெறுகின்றனர். முதல் பட்டினத்தார் நம்பியாண்டார் நம்பியால் குறிப்பிடப் பெற்றவர் (பத்தாம் நூற்றாண்டின் இறுதி.) இவர் பாடிய ஐந்து பிரபந்தங்கள் பதினோராம் சைவத் திருமுறையில் தொகுக்கப் பெற்றுள்ளன இரண்டாவது.*

*பட்டினத்தார் பல பாடல்கள் பாடினார். இவை பட்டினத்துப் பிள்ளையார் பிரபந்தத் திரட்டு (பதினான்காம் நூற்றாண்டின் இறுதி) என்று தொகுப்பில் காணப்பெறுகின்றன. இவருடைய காலமே சித்தர்கள் வாழ்ந்த காலம் இருவருடைய வரலாறுகளும் (மூவராக எழுதப்பெற்றுள்ளன : (1) பிற்காலத்துப் பெரியார் ஒருவர் பட்டினத்துப் பிள்ளையார் புராணம் என்ற நூலும் (2) தொழுவூர் வேலாயுத முதலியார் திருவெண்காட்டடிகள் என்ற நூலும் (3) தண்டபாணி சுவாமிகள் தாம் பாடிய புலவர் புராணத்தில் பல புதிய கதைகளையும் சேர்த்துப் பாடிய பட்டினத்தார் சரித்திரம் என்பவை) பின்னிப்பிணைந்து காணப்பெறுகின்றனவாதலால் சித்தர் பட்டினத்தாரின் வரலாறு ஈண்டு எடுத்துக் கொள்ளப் பெறவில்லை. இவருடைய பாடல்கள் மட்டிலுமே காட்டப்பெறுகின்றன.*

**பத்திரகிரியார்**

*துளுவ நாட்டைச் சேர்ந்த மன்னர் இவர் பத்திரிகிரி அரசர் என்ற பெயருடன் ஆட்சி செய்து வந்த இவர் பட்டினத்தாரைக் கழுவேற்ற முயன்ற போது தோற்று அவருக்கு அடிமையாகி அரசு போகங்களைத் துறந்து, அவரையே குருவாக ஏற்று, தொண்டுகள் செய்து முக்தி அடைந்தவர். (16 ஆம் நூற்றாண்டு இறுதி) இவருடைய வரலாற்றைப் பட்டினத்தார் வரலாற்றுடன் படித்து அறியலாம்.*

**திருப்புலம்பல்**

*இந்நூல் பத்திரகிரியாரால் அருளப்பெற்றது. ‘‘திருப்புலம்பல் என்றும் மெய்ஞ்ஞானப் புலம்பல்’’ என்றும் பெயர் பெற்று வழங்குகின்றது. 235 கண்ணிகள் கொண்டது இதன் கண்ணிகள் ஒவ்வொன்றும் ‘‘எக்காலம்’’ என்று முடிவது.*

*ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த செல்வப்*
*பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர்வ தெந்நாளோ?*
*(தா.பா. எந்நாட்கண்ணி - அடியார் வணக்கம் 25)*

*என்று பத்திரகிரியரைப் பாராட்டுவர் தாயுமான அடிகள்*

***கண்ணால் அருவி கசிந்து முத்துப் போல் உதிரச்***
***சொன்ன பரம்பொருளை எண்ணுவது எக்காலம்? (60)***

***ஆகம் மிகவுருக அன்புருக என்புருக***
***போக அநுபூதி பொருந்துவதும் எக்காலம்? (61)***

***குறியாகக் கொண்டு குலம் அளித்த நாயகனைப்***
***பிரியாமல் சேர்ந்து பிறப்பறுப்பது எக்காலம்? (136)***

***இன்னவென்று சொல்லவொண்ணா***
***எல்லையற்ற வான் பொருளைச்***
***சொன்னதென்று நான் அறிந்து***
***சொல்வதினி எக்காலம்? (160)***

*என்பவை போன்ற கண்ணிகள் இறையனுபவத்தைக் குறிப்பிடுகின்றன.*

*மருதமலையில் (கோயம்புத்தூருக்கு அருகில் உள்ளது) புகழுடன் வாழ்ந்து வந்தார் எனவும். இவர் வாழ்ந்த சின்னங்களை இன்றும் அம்மலையில் காணலாம் என்றும் சிலர் கூறுவர். இவருடைய பாடல்கள் எளிய நடை சொல்நயம் தெளிந்த உவமை கொண்டவை.*

***நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே***
***நச்சுப்பையை வைத்திருக்கும் நல்ல பாம்பே***

*என்று இன்றும் மக்கள் வாயில் தாண்டவமாடும் புகழ் பெற்ற பாடல் இவருடையது. பாம்பாட்டுவோர் பிடாரர். இவர்களே பாம்பாட்டிகள். "ஆடு பாம்பே" என்று பாம்பை ஆட்டுவிப்பது போல் அபிநயம் பிடித்துப் பாடுவதால் இவர் பாம்பாட்டிச் சித்தர் என்ற பெயர் பெற்றார். இவர் பாடிய 129 பாடல்கள் இன்றும் வழக்கில் உள்ளன. "பதினெண்சித்தர் பாடல்கள்" என்ற தொகுப்பு நூலிலும் இடம் பெற்றுள்ளன.*

*இவை. கடவுள் வணக்கம் 9, குருவணக்கம் 10, பாம்பின் சிறப்பு 5, சித்தர் வல்லபம் 10, சித்தர் சம்வாதம் 5, பொன்னாசை விலக்கல் 10 உடலின் குணம் 10, அகப்பற்று நீக்கல் 32, இறுதியில் மீண்டும் சித்தர் வல்லபம், 18 பாடல்கள், இவை எண்சீர் விருத்தங்களாக அமைந்துள்ளன.*

*இப்பாடல்கள் சம்பிரதாயக் கருத்துக்களை நுவல்வதாகத் தோன்றினாலும் அடிப்படையில் ஆழ்ந்த தத்துவம் கொண்டவை. பாம்புவடிவாக மண்டலித்துள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதன் மூலம் ஆன்ம சொரூப தரிசனமும் பாத தரிசனமும் செய்வதை இந்தப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. பாடல்கள்அனைத்திலும் எளிமையான உவமைகள் கையாளப்பெற்றுள்ளன.*

**இடைக்காட்டுச் சித்தர்**

*இவர் பாடிய பாடல்கள் 130. இவை பல்வேறு வகைச் சந்தங்களில் அமைந்துள்ளன. இவர் இடைக்காடு என்ற ஊரினர் போலும் என்று கருத இடந்தருகின்றது. "தாண்டவக் கோனே" "கோனே" கோனாரே என்று இவர் பாடிய பாடல்கள் அமைந்திருப்பதால் இவர் கோனார் (இடையர் - யாதவர்) வகுப்பினர் என்றும் கருதப் பெறுபவர். (நகைச்சுவை மன்னர்*

*என்.எஸ்.கிருட்டிணன் தாண்டவக் கோனே என்ற தொடர் அமைத்துப் பாடித் தமிழுலகத்தை மகிழ்வித்தமை ஈண்டு நினைவிற்கு வருகின்றது.) இவர் கொங்கணச் சித்தரின் சீடர். (15 ஆம் நூற்றாண்டு) இவர் பிறவி வரலாறு ஒன்று கொங்கு மண்டல சதகத்தில் (38) உள்ளது.*

*கொற்றவனூரில் வாழ்ந்த இடையர் சிறுவன் ஒருவன் மலைச்சாரல் பக்கம் ஆடு மேய்க்கச் சென்றவன். மாலையில் வீடு திரும்பவில்லை. இரவு முழுவதும் தனிமையில் வருந்திக்காலம் போக்கினான். பொழுது புலர்ந்ததும் பசி அதிகமாயிற்று ஒரு காட்டுக்கொட்டையை எடுத்து ஒரு கல்லின் மீது வைத்து மற்றொரு கல்லால் அதை உடைக்கவே, கீழிருந்த கல்லில் குருதி பெருகிற்று. இதனைக் கண்ட சிறுவன் ஊழ்வினைப் பயனால் இது “சிவலிங்க வடிவம்” என்று உணர்ந்து அதனைக் கட்டிக் கொண்டு தன் வசமற்றுக் கண்ணீர் உகுத்தப்படி அங்கிருந்தான்.*

*பிள்ளை வீடு திரும்பாதது கண்டு அவனுடைய தந்தை இரவெல்லாம் தேடி அங்கு வந்து தன் மகனின் நிலை கண்டு வியப்பெய்தினான். மகன் சிவலிங்கத்தை விட்டு பிரிய மனம் வராமையால் அங்கேயே ஒரு கொட்டகை அமைத்து அவ்விடத்தைக் கோயிலாக்கினான். தந்தையும் மகனுடன் சேர்ந்து வழிபட்டு வந்து உரிய காலத்தில் சிவப்பேறு எய்தினான். சிறுவனும் நெடுநாள் தங்கியிருந்து பெரிய ஞானியாகவும், சித்தராகவும் விளங்கினான். இடையர் குலத்தைச் சார்ந்தவனாதலால் “இடைஞானி” எனவும், இடைக்காட்டுச் சித்தராகவும் பெயர் பெற்றான். இவருடைய திருமேனி கொற்றவனூர் திருக்கோயிலில் இன்றும் பூசிக்கப் பெறுகிறது. இவர் குலத்தாருக்கு அக்கோயிலில் சில மரியாதைகள் நடைபெறுகின்றன.*

*இன்னொரு கதையும் உண்டு மலைச்சாரலில் இவர் வழக்கம் போல் ஆடுமேய்த்துக் கொண்டிருந்த போது நவசித்தருள் ஒருவர் (கொங்கணர்) வந்து பால் வேண்ட, அவருக்கு இவர் பால் முதலியன வழங்கி உபசரித்தார் என்றும், அதற்கு ஈடாக அச்சித்தர் ஞான உபதேசம் செய்துவிட்டு ஏகினார் என்றும், அதன் விளைவாக இவர் சகல சித்திகளும் அடைந்து சித்தரானார் என்றும் கூறப்பெறுகின்றது.*

*நாட்டில் ஒருமுறை மழையின்றிப் பஞ்சம் ஏற்பட்டு ஆடுமாடுகள் கூடத் தீவனம் இன்றித் துயரடைந்த போது இவர் தம் சித்துக்களினால் அவற்றைக் காத்ததுடன் கோள் நிலைகளையும் மாற்றியமைத்து மழை பெய்யச் செய்து உயிரினங்களைக் காப்பாற்றினார் என்றும் மற்றொரு கதையும் உண்டு.*

*இவர் பாடல்கள்: காப்புச் செய்யுளுடன் தொடங்குகின்றது. முதலில் தாண்டவக்கோன் தோன்றி இசையுணர்வு பற்றிப் பத்துப் பாடல்கள் பாடுகின்றார்.*

***எல்லா உலகமுள்ள எல்லா உயிர்களும்***
***எல்லாப் பொருள்களும் எண்ணரிய***
***வல்லாளன் ஆதி பரம சிவனது***
***சொல்லால் ஆகுமே கோனாரே.***

*என்பது முதற்பாடல் ஒவ்வொரு பாடலும் கோனாரே என்று இறும். பின்னர் நாராயணக்கோன் தாண்டவக் கோனை விளித்துப் பாடுகின்றார்.*

**அகப்பேய்ச் சித்தர்**

*மனத்தைப் பேய் என்று உருவகப்படுத்திப் பாடியமையால் இச்சித்தர் ''அகப் பேய்ச்சித்தர்'' என வழங்கப்பெறுகின்றார். (15 ஆம் நூற்றாண்டு) மனத்தை ஒரு பேயாகக் கருதி அதற்குப் பெண் உருவம் நல்கி அதனைத் தம்முன் நிறுத்திப் பாடல்களைப் புனைந்துள்ளார்.ஒவ்வொரு பாடலும் ''அகப்பேய்'' என்ற விளியுடன் அமைந்துள்ளது. அச்சு ஏடுகளில் அகப்பைச் சித்தர் என்றிருப்பது பிழை.*

*இவர் படைப்பில் 90 கண்ணிகள் அடங்கியுள்ளன. மனம் பேய்போல் கட்டுப்படாமல் அலைகின்ற படியால் மனம் பேயாக உருவகப்படுத்தப் பெற்றது. இவர்தம் பாடல்கள் பல்வேறு சமயக் கருத்துக்கள் - குறிப்பாக சைவசித்தாந்தக் கருத்துக்கள் - பொதிந்துள்ளன.*

***நஞ்சுண்ண வேண்டாவே - அகப்பேய்***
***நாயகன் தாள் பெறவே***
***நெஞ்சு மலையாதே - அகப்பேய்***
***நீ ஒன்றும் சொல்லாதே*** *(1)*

*என்பது முதற்பாடல்*
*ஐம்பெரும் பூதங்களின் உற்பத்தியைப் பற்றிச் சில பாடல்கள் பேசுகின்றன.*
*பிருதிவி பொன்னிறமே - அகப்பேய்*

***பேதமை அல்லவடி***
***உருவது நீரடியோ - அகப்பேய்***
***உள்ளது வெள்ளையடி***
***தேயு செம்மையடி- அகப்பேய்***
***திடனது கண்டாயே***
***வாயு நீலமடி - அகப்பேய்***
***வான் பொருள் சொல்வேனே.***

*இப்பாடல்களுள் பிருதிவி, தேயு, வாயு அமைந்திருப்பதைக் காணலாம்.*

**அழுகுணிசித்தர்**

*இச்சித்தரின் பாடல்கள் 32 பாடல்கள் அழகும் அணிநயமும் இனிமையும் கொண்டவை. அதனால் அழகுச் சித்தர் என வழங்கப் பெறுகின்றார். (15 ஆம் நூற்றாண்டு) இப்பெயர் மருவி அழுகணிச் சித்தர் அழகுணிச் சித்தர் என்றும் வழங்கப் பெறுகின்றது. ஒரு குழந்தையைக் ''கண்ணம்மா'' என்று விளித்துக் கேட்கும் முறையில் பாடல்கள் அமைந்துள்ளன.*

***மூலப் பதியடியோ மூவிரண்டு வீடதிலே***
***கோலப் பதியடியோ குதர்க்கத் தெருநடுவே***
***பாலப் பதிதனிலே தனலாய் வளர்த்த கம்பம்***
***மேலப் பதிதனிலே என கண்ணம்மா!***
***விளையாட்டைப் பாரேனொ!***

*என்பது முதற்பாடல்.*

*இங்ஙனம் கலித்தாழிசையில் பாடல்கள் யாவும் அமைந்துள்ளன.ஈண்டுக் கண்ணம்மா என்று விளிப்பது இறைவனை. இவ்வகைப்பாடல்களே பிற்காலத்தில் பாரதியாருக்குக் கண்ணன் பாட்டு அமையக் கை கொடுத்து உதவின என்று கருதுவதில் தவறில்லை.*

*பாடல்கள் யாவும் ஏதோ ஒரு தத்துவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன. சித்தரின் பாட்டல்லவா? வீண் சொற்களுக்கு இங்கு இடம் இல்லை.*

***எண்சாண் உடம்படியோ ஏழிரண்டு வாயிலடி***
***பஞ்சாயக் காரர்ஐவர் பட்டணமும் தானிரண்டு***
***அஞ்சாமற் போகின்றாய் ஆக்கினைக்குத் தான் பயந்து***
***நெஞ்சார நில்லாமல் என் கண்ணம்மா!***
***நிலை கடந்து வாடுறண்டி!***

**குதம்பைச்சித்தர்**

*குதம்பை என்பது மகளிர் காதில் அணியும் ஓர் அணி குதம்பை அணிந்த பெண்ணை மகடூஉ முன்னிலையாகக் குதம்பாய் என்று விளித்து இச்சித்தர் பாடியமையால் குதம்பைச் சித்தர் என்று பெயர் பெறுகின்றார். இவர் பாடிய கண்ணிகளின் தொகை 32. இவை எளிய இனிய சொற்களாலானவை. ஆயினும் ஆழ்ந்த பொருள் பொதிந்தவை.*

***வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்***
***பட்டயம் ஏதுக்கடி - குதம்பாய்***
***பட்டயம் ஏதுக்கடி ?***

*என்பது முதற்பாடல். இவர் தம் பாடல்கள் மிகு புகழ் பெற்ற பாடல் ஒன்று உண்டு. அது,*

***மாங்காய்ப்பால் உண்டு மலைமேல் இருப்போர்க்குத்***
***தேங்காய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய்***
***தேங்காய்ப்பால் ஏதுக்கடி?***

*என்பது உண்மையறிவைப் பெற்று இறைவனை நாடியிருக்கும் மெய்ஞ்ஞானிக்கு உலகப் பொருள்களும் நடங்குகளும் வேண்டுவதில்லை என்பது இதன் கருத்து.*

***மெய்ப்பொருள் கண்டு விளங்கும் மெய்ஞ்ஞானியர்க்குக்***
***கற்பங்கள் ஏதுக்கடி - குதம்பாய்***
***கற்பங்கள் ஏதுக்கடி?***

*சித்த நெறியினர் காயகற்பம் தேடி அலைய வேண்டியதில்லை என்பது இதன் கருத்து.*

*யோகநெறி, பத்திநெறி, புறப்பூசை முதலியவற்றைப் பழிப்பன போன்ற பாடல்கள் பல இங்கு உள்ளன. சித்தர் மரபுக்கு ஏற்ப இவர் இவை அனைத்தையும் கடந்த மேல் நிலையில் உள்ளவராதலால் கீழ்ப்பட்ட நிலைகள் வேண்டக் கடவன அல்ல என்பது இவர் கருத்துப்படப் பாடுவார்.*

***நித்திரை கெட்டு நினைவோடு இருப்பார்க்கு***
***முத்திரை ஏதுக்கடி - குதம்பாய்***
***முத்திரை ஏதுக்கடி ?***

*என்பதில் இதனைக் காணலாம். இங்குச் சுழுத்தி நிலை அடைந்தோர்க்கு பூசனைகளால் விளையும் பயனில்லை என்பது கருத்தாகும். மெய்ஞ்ஞானியரைப் பற்றிப் பல பாடல்கள்:*

*முக்கோணந் தன்னில் முளைத்தமெய்ஞ் ஞானிக்குச்*
*சட்கோணம் ஏதுக்கடி - குதம்பாய்*
*சட்கோணம் ஏதுக்கடி ? (17)*

*முத்தி பெற்றுள்ளம் முயங்குமெய்ஞ் ஞானிக்குப்*
*பத்தியம் ஏதுக்கடி - குதம்பாய்*
*பத்தியம் ஏதுக்கடி ? (19)*

*அட்டாங்க யோகம் அறிந்தமெய்ஞ் ஞானிக்கு*
*முட்டாங்கம் ஏதுக்கடி ? (21)*

*வேகம் அடங்கி விளங்குடிமய்ஞ் ஞானிக்கு*
*யோகந்தான் ஏதுக்கடி - குதம்பாய்*
*யோகந்தான் ஏதுக்கடி ? (22)*

*செத்தாரைப் போலத் திரியுமெய்ஞ ஞானிக்கு*
*கைத்தாளம் ஏதுக்கடி ? - குதம்பம்*
*கைத்தாளம் ஏதுக்கடி ? (24)*

*இப்பாடல்கள் யாவும் சீவன் முத்தர் நிலையைக் குறிப்பனவாகக் கருதலாம்.*

*ஆடம்பரங்கள் வேண்டா. விழா வேண்டா, சிறப்பான தனியுடை வேண்டா என்பன போன்ற கருத்துக்களைக் கூறி உள்ளத் துறவினால் வரும் அத்துவித நிலையே உயர்வானது என்பதை எல்லாப் பாடல்களிலும் வற்புறுத்துவர் இந்தச் சித்தர், பாமர மக்கள் மொழியில் பாடியிருந்த போதிலும் குழூஉக் குறியாயுள்ள ஆழ்ந்த பொருள் எளிதில் விளங்காப் புதிர்களாக* ((Mysterious) *உள்ளன.*

**கடுவெளிச்சித்தர்**

*கடுவெளி என்பது மனவாக்குக் கடந்த பரவெளி, அதாவது பரம்பொருள் நிலை, (கடுவெளி என்பதற்கு ஓயாது கடுகி இயங்கிக் கொண்டிருக்கும் மூச்சு என்றும் பொருள் கூறுவர்) இக்கடுவெளியைப் பாடியதால் இவருக்குக் கடுவெளிச் சித்தர் என்ற திருநாமம் வழங்குவதாயிற்று. (15 ஆம் நூற்றாண்டு). இவர் பாடியது 34 கண்ணிகள் கொண்டதொடு ஆனந்தக் களிப்பு. இப்பாடல்கள் மக்களிடையே பெரும்புகழ் பெற்றதனால் இத்தகைய யாப்புக்கு ஆனந்தக் களிப்பு என்ற பெயரே தமிழ் இலக்கியத்தில் நிலைத்து விட்டது.*

*பாபஞ்செய் யாதிரு மனமே - நாளைக்*
*கோபஞ்செய் தேயமன் கொண்டோடிப் போவான்*
*பாவஞ்செய் யாதிரு மனமே.*

*என்ற பல்லவியுடன் தொடங்குகின்றது இவர் பாடல்.*

*சாபம் கொடுத்திட லாமோ ? -விதி*
*தன்னை தம்மாலே தடுத்திடலாமோ?*

***கோபம் தொடுத்திட லாமோ? - இச்சை***
***கொள்ளக் கருத்தைக் கொடுத்திடலாமோ?***

*என்று சரணம் தொடங்கி நடைபெறுகின்றது. இவர் பாடல்கள் மிகுபுகழ் பெற்று சாதாரன மக்கள் நாவிலும் தாண்டவமாடுவது,*

***நந்த வனத்திலோ ராண்டி - அவன்***
***நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி***
***கொண்டுவந் தானொரு தோண்டி - மெத்தக்***
***கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி.***

*என்ற பாடலாகும். ஆன்மா பெறுவதற்குரிய மானிட யாக்கையைப் பெற்று அதனை வீணடிப்பது இவண் சொல்லப்பெற்ற கருத்தாகும்.*

*குருவின் சொற்படி நடந்து உய்ய வேண்டும் என்பதை,*

***மெய்க்குரு சொற்கூட வாதே - நன்மை***
***மென்மேலும் செய்கை மிகவடக் காதே***
***பொய்க்கலை யால் நட வாதே - நல்ல***
***புத்தியைப் பொய்வழி தனில் நடத் தாதே.***

*என்ற பாடலில் தெளிவிக்கின்றார்.*

*உலகப்பற்றைத் துறந்து குருவின் சொற்படி நடந்து, எவரிடத்தும் அன்புகாட்டி வாழ்ந்தால் பரமானந்தம் சித்திக்கும் என்பது இச்சித்தரின் கருத்து, சித்த நெறி என்ற பெயரால் ஏற்பட்டுள்ள தவறுகளை இவர் கடிகின்றார்.*

***சிவமன்றி வேறே வேண்டாதே - யார்க்குத்***
***தீங்கான் சண்டையைச் சிறக்கத் தூண்டாதே***
***தவநிலை விட்டுத் தாண்டாதே - நல்ல***
***சன்மார்க்க மில்லாத நூலை வேண்டாதே (26)***

*என்ற பாடலில் இப்போக்கைக் காணலாம். (காலத்தால் சித்தர் நெறியில் இவர் ஏனையோருக்குப் பிற்பட்டவர் என்று நினைக்கத் தோன்றுகின்றது.)*

***நல்ல வழிதனை நாடு - எந்த***
***நாளும் பரமனை நத்தியே தேடு***
***வல்லவர் கூட்டத்தில் கூடு - அந்த***
***வள்ளலை நெஞ்சினில் வாழ்த்திக் கொண்டாடு (6)***

***வேதவிதப்படி நில்லு - நல்லோர்***
***மேவும் வழியினை வேண்டியே செல்லு***
***சாத நிலைமையே சொல்லு - பொல்லாச்***
***சண்டாளக் கோபத்தைச் சாதித்துக் கொல்லு (8)***

*என்பன போன்ற பாடல்கள் நல்வழியில் ஆற்றுப்படுத்துபவை.*

**கொங்கணச் சித்தர்**

*இவர் "கொங்கணநாயனார்" கொங்கணநாதர் என்ற பெயர்களாலும் வழங்கப்பெறுவர். (கி.பி ஏழாம் நூற்றாண்டு) கொங்கு நாட்டைச் சேர்ந்தவராதலின் இப்பெயர்கள் பெற்றார். இவரைப் போதருடைய சீடர் என்று சிலர் கருதுவர். இளம்பெண்களை முன்னிறுத்தி இச்சித்தர் "கும்மியடியுங்கடி" என்று கூறிப் பாடும் பாடல்கள் "வாலைக்கும்மீ" என வழங்கப்பெறுகின்றது. மருத்துவம் "இரசவாதம்"* (Alchemy) *"யோகம்" பற்றியும் கூட இவர் பாடல்கள் அமைந்துள்ளன.*

*இவர் பாடிய "வாலைக்கும்மீ" மிக்க பிரசித்தி பெற்றது. இது பிற்காலத்தில் பெரிதும் வழங்கிவருகின்ற கும்மி மெட்டில் 110 கண்ணிகளைக் கொண்டது. பாடல் தோறும் "வாலைப் பெண்ணே" என்று விளித்துப் பாடுகின்றார். அஞ்செழுத்தைப் பலமுறை குறிப்பிடுகின்றார். அவ்வையின் நீதிகளை நான்கு முறை குறிப்பிடுகின்றார். பல பாடல்கள் யோகமார்க்கத்துக்குரிய குழூஉக் குறிகளைக் கொண்டவை எனினும் இவர் சொல்லும் உலகியல் நீதிகளும் கருதத்தக்கன.*

***ஆதியில் ஐந்தெபுத் தாயினாள் வாலைப்பெண்***
***ஐந்தெழுத் துமென்று பேரானாள்***
***நாதியி னூமை யெழுத்தவள் தானல்ல***
***ஞான வகையிவள் தானானாள்***
***ஊமையெழுத்தே உடலாச்சு - மற்றும்***
***ஓடிமன் றெழுத்தே யுயிராச்சு***
***ஆமிந் தெழுத்தை யறிந்து கொண்டு வினை***
***யாடிக் கும்மியடியுங்கடி***
***செகம் படைத்ததும் அஞ்செழுத்தாம் பின்னும்***
***சீவன் படைத்தும் அஞ்செழுத்தாம்***
***உகமு டிந்ததும் அஞ்செழுத்தாம் பின்னும்***
***உற்பன மானதும் அஞ்செழுத்தாம்***
***சிதம்பர சக்கரந் தானறி வாரிந்தச்***
***சீமையி லுள்ள பெரியோர்கள்***
***சிதம்பர சக்கர மென்றால் அதற்குள்ளே***
***தெய்வத்தை யல்லோ அறிய வேணும்***

**திருவள்ளுவர்**

*திருக்குறளாசிரியரின் பெயரிலுள்ள இச்சித்தர் வேறானவர். இவரது திருவள்ளுவர் ஞானம் என்ற நூல் காப்புச் செய்யுளுடன் இருப்பது பாடல்களைக் கொண்டுள்ளது. எண்சீர் விருத்தம், கட்டளைக் கலித்துறை, தவு கொச்சம், நேரிசை வெண்பா யாப்புகளில் இவை அமைந்துள்ளன. ஒரு சில பாடல்களைக் காட்டுவேன்.*

***யோனிக் குள்ளாசை யொழியாது***
***தனித்தியம் உங்களுயிர்***
***தேனிக்குள் இன்பம் சுகாதித்***
***மோவரும் சிற்றின்பத்தில்***

*ஊனற்றுக் காயம் உடலற்றுப்*
*போம்பொழுது ஒன்றறியா*
*ஈனர்க்குச் சொர்க்கம் சுடுகாடு*
*ஒழிய இனி இல்லையே (8)*

*இந்தவுடல் காயம் இறந்துவிடும் இவ்வுலகில்*
*வந்தவழி தானறியா வாழ்க்கை - இந்தவுடல்*
*அற்பக் குழியில் அரவம் இருப்பதெனும்*
*கற்பகத்தைக் காண்டிடுமோ காண் (9)*

*சுழியறியார்க் கென்ன சுகமறியார்க் கென்ன*
*வழியறியார்க் கென்ன எய்துமாறு - சுழியறியா*
*மூலமறிந்த தவ்வழியில் முத்தியடை யார்க்குநமன்*
*காலனவர்க் கேமரணம் காண் (11)*

*காயசித்தி யாலெனது கன்மவினை போக்கியவின்*
*மாயசித்தி மூலகழி வாய்க்குமே - காயசித்தி*
*மூலப் புளியால் முதல் தீட்சை யாச்சுது இனிக்*
*காலமென்னி ரண்டாண்டில் காண் (14)*

**அகத்தியர்**

*அகத்தியர் என்ற பெயரில் ஒவ்வொரு காலத்திலும் சிலர் வாழ்ந்துள்ளனர். இவர்கள் முனிவர்களாகவும், புலவர்களாகவும், மருத்துவர்களாகவும், சோதிடர்களாகவும் இருந்தவர்கள். ஞானம் என இரு தனிப்பாடல்களும் ஞானம் 2, ஞானம் 6, 9, 13, 15 என்ற ஐந்து சிறு நூல்களும் உள்ளன. யாவும் யோகம், ஞானம் என்ற பொருள்கள் பற்றியவை.*

**ஞானம்**

*5 இல் முதல் பாட்டு, கலை பதினாறு என்கின்றார். இவை மேதாதி உன்மனாந்தமான சோடசக்கலைகளாயிருக்கலாம். ஞானம் 9 என்பது வாழ்க்கைக்குரிய நல்லுபதேசம் போல் உள்ளது. இதன் இறுதிப்பாடல்,*

*சத்தியமே வேணுமடா மனித னானால் -*
*சண்டாளஞ் செய்யாதே தவறி டாதே*
*நித்தியகர் மம்விடாதே நேமம் விட்டு*
*நிட்டையுடன் சமாதிவிட்டு நிலையே ராதே*

*புத்தி கெட்டுத் திரியாதே பொய்சொல் வாதே*
*புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு*
*கத்தியதோர் சள்ளிட்டுத் தர்க்கி யாதே*
*கர்மியென்று நடவாதே கதிர்தான் முற்றே.*

**ஞானம்**

*13 யோகம் பற்றிய நுட்பமான பல பொருள்களைப் பேசுகிறது. நடை சாமானிய நடையாயினும், பொருள் சிறப்புடையது.*

*ஓரெழுத்து என்பது பிரணவம். இதை இந்து மதத்தின் பிரிவுகளான எல்லாச் சமயங்களும் மிகவும் போற்றிக் கூறுகின்றன.*

**திருமூல சித்தர்**

*திருமந்திரம் பாடிய திருமூலர் வேறு அவர் பாடிய நூல் சைவத்திருமுறைகளில் பத்தாவதாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. (திருமுறை இலக்கியங்கள் (இயல் 3) காண்க.) இது கலிவிருத்தம் என்ற ஒரெ யாப்பில் பாடப்பெற்ற பனுவல்.*

*திருமூலர் ஞானம் என்பது சித்தர் கோவையுள் சேர்க்கப்பெற்ற நூல். இது பதினொரு பாடல்களைக் கொண்டது. அந்தாதித் தொடையில் அமைந்தது. ஒவ்வொரு பாடலிலும் ''மூலம்'' என்ற சொல் வருகிறது. பிற்காலத்தில் யோகம் ஞானம் முதலான பொருள்கள் பற்றி யார் பாடினாலும் திருமூலர் பாடல் என்றே பெயரிட்டு விட்டார்கள் என்று சொல்லத் தோன்றுகின்றது. இந்த நூல் பிரணவத்தையும் ஓங்காரத்தையும் சொல்கிறது.*

***மூலமெனும் ஆதார வட்டந் தானே***
***முச்சுடரு முக்கோண மூன்று நாடிச்***
***சீலமெனும் சிவலிங்க பாத தீர்த்தம்***
***திருவடியும் திருமேனி நடமு மாகும்***
***கோலமுடன் அண்டமெலாம் தாங்கிக் கொண்டு***
***கொழுந்துவிட்ட கம்பமதாய் மேலே நோக்கி***
***ஆலமுண்ட கண்ட மெலாந் தானாய் நின்ற***
***அகாரமுதல் அவ்வெழுத்தை அறிந்து பாரே (3)***

*இது மூன்றாவது பாடல் இறுதிப்பாடல் இது.*

***மேவியதோர் சற்குருவின் பாதந் தன்னை***
***மெய்ஞ்ஞான மென்றதனை மேவிக் கொண்டு***
***ஆவியுடல் காயமெல்லாம் அறிந்து பார்த்து***
***அத்தனார் வடிவமென்றே அறிந்து கொண்டு***
***பாவனையுள ஆனதெல்லாம் விட்டு நீங்கிப்***
***பகலிரவு அற்றிடத்தே கருத்தை வைத்துச்***
***சீவனையும் சிவன்தனையும் ஒன்றாய்த் தானே***
***திருமூலர் பாதமொன்றித் திடமாய்க் காணே.***

*இதில் பாடிய ஆசிரியர் பெயர் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.*

**சுப்பிரமணியர்**

*இவர் பெயரால் ''சுப்பிரமணியர் ஞானம்'' என்ற ஒரு நூல் சித்தர் கோவையுள் சேர்ந்துள்ளது. முருகனாகிய சுப்பிரமணியர் அகத்தியமுனிக்கு உபதேசித்த ஞானம் எனப் பொருள்படும் அச்சில் 32 பாடல்கள் உள்ளன. பஞ்சாக்கர மந்திரத்தின் பல நிலைகளை இரண்டு பாடல்கள் பகர்கின்றன. பஞ்சாக்கர மந்திரம் பற்றிய ஒரு பாடல்.*

*ஆமப்பா நமசி வாய நமவென்றே*
*அன்பின் வய நமசிவய நமசி யென்று*
*நாமப்பா தலைகாலால் மாறிக் கொண்டு*
*சங்கையுடன் கால் தலையில் மாறிக் கொள்ளு*
*ஆமப்பா நமசிவய சிவயநம வென்றும்*
*அதன்பிறகு சிவயநம சிவநம என்றும்*
*ஓமப்பா நமசிவய என்று மாற*
*உண்மையென்ற ஆதாரம் சித்தி யாமே.*

*இதில் சிவாயநம என்ற தொடர் வெவ்வேறு வடிவத்தில் வந்துள்ளதைக் கண்டு மகிழலாம்.*

**வால்மீகர்**

*"ஞானம் பதினாறு" என்று நூல் பாடியவர் 11 ஆம் பாடலில் தம் பெயரைக் குறிப்பிடுகின்றார். இந்நூற்பாடலில் பதினாறு என்பதை இருமுறை (11, 15 பாடல்கள்) கூறுகின்றனர். வாலையைத் துதிக்கின்றார். சிவகாமி என்றே பாடுகின்றார். ஞானயோகத்தைக் கூறி போலிக் குருக்களையும் காட்டுகின்றார். இராமாயணம் பாடிய பெயரை இவருக்கு வைத்தார் போலும்.*

*ஆமம்பா வுலகத்தில் பெருநூல் பார்த்தோர்*
*அவரவர்கண் டதையெல்லாம் சரியை என்பார்*
*ஓமப்பா கல்செம்பைத் தெய்வம் என்றே*
*உருகுவார் பூசிப்பார் கிரியை என்பார்*
*வாமப்பா யோகம் என்று கனிகாய் தின்று*
*வாய்பேசா ஊமையைப் போல் திரிகு வார்கள்*
*காமப்பா ஞானமென விண்டு மேலும்*
*காக்கை பித்தன் மிருகம் போல கத்துவாரே.*

*இதில் சரியை, கிரியை, யோகம், ஞானம் பற்றிய குறிப்புகளைக் காணமுடிகின்றது.*

**இராம தேவர்**

*சிவபூசையால் சகல சித்திகளையும் பெற்றவர் இச்சித்தர். இவர் நாகையில் வீற்றிருந்ததாகச் சொல்வர். இவர் மருத்துவத்திலும் தேர்ந்தவர். இராம தேவர் வைத்தியம் என்று அது சிறப்புப் பெற்றது. வைத்திய நூல் ஒன்றும் இவர் செய்ததாகச் சொல்லப் பெறுகின்றது. இராமதேவர் பூசாவிதி என்பது பத்துப்பாடல் அடங்கிய ஒரு சிறுநூல் அந்தாதித் தொடையில் அமைந்தது. வாலையைப் பூசிப்பதும் உருச்செபிப்பதும் கூறுவது.*

*ஆதியென்ற மணிவிளக்கை யறிய வேணும்*
*அகண்டபரி பூரணத்தைக் காண வேணும்*
*சோதியென்ற துய்யவெளி மார்க்க மெல்லாம்*
*சுகம்பெறவே மனோன்மணியென் ஆத்தாள் தன்னை*
*நீதியென்ற பரஞ்சோதி ஆயி பாதம்*
*நிற்குணத்தி நின்றகலை யாரும் காணார்*
*வேதியென்ற வேதாந்தத் துள்ளே*
*விளங்குவதும் பூசையிது வீண்போ காதே.*

*என்பது முதல் பாடல். ஒரு பாடல் யோகத்தைப் பற்றி கூறுகின்றது.*

**கருவூர்ச் சித்தர்**

*இவர் கருவூரில் பார்ப்பவர் குலத்தில் பிறந்தவர். சிவனடி மறவாத சித்தர். காயசித்தி கைவந்தவர். பல அற்புதங்கள் செய்து காட்டியவர். இவரைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. தஞ்சைப் பெரிய கோவில் சிவலிங்கத்திற்கு அட்டபந்தனம் செய்தவர். இவர் தமது குருவாக திருமூலர், சட்டைமுனி, போகநாதர், பதஞ்சலி என்போரைக் குறிப்பிடுகின்றார்.*

*''கருவூரார் பூசாவிதி'' என்பது இவருடைய சிறப்பான நூல் அந்தாதியாக 30 பாடல்களும் காப்பு ஒன்றும் உடையாது. இந்த நூலில் ஆசிரியர் வாலையை வழிபடுகின்றார். வாலையாவது ஒரு சக்தி பேதம், பருவமடையாத இளம் பெண்ணைச் சத்தியாகக் குறிப்பிடுவது சாக்தத்தில் ஓர் அம்சமாகும். ஆசிரியர் இதையே குறிப்பிடுகின்றார். பூணாத பணிபூண்டு சிறுபெண்ணாகப் போதமென்றும் பொருள் பறிக்க வருவாய். (13) என்றும், சுசுதேனென்ற மொழிச்சியிவள் சித்தர்க்கெல்லாம் சிறுபிள்ளை பத்து வயதுள்ள தேவிசுசு என்றும் பாடுவதைக் காணலாம். ஞானத்தால் ஞான வடிவான இறைவியைக் கற்றவர்களுக்கு நாரேது, பூவேது வாசமேது நல்ல புஷ்பந்தானேது, பூசையேது (10)*

*யோக மார்க்கத்தில் செல்லும்போது அங்குக் காண்கின்ற ஒளியையும், ஒலியையும், மந்திரங்களையும் குறிப்பிட்டுச் சொல்கின்றார். பெண்ணாசையை விட்டுத் துறவு பூண்டு செய்வோர் பூசையெல்லாம், மனம் அடங்காத போது பயனற்றது என்கின்றார்.*

***புகலுவார் வேதமெல்லாம் வந்த தென்று***
***பொய்பேசிச் சாத்திரங்கள் மிகவும் கற்றே***
***அகலுவவர் பெண்ணாசை விட்டோ மென்றே***
***அறிவு கெட்டே ஊர்தோறும் சுற்றிச் சுற்றி***
***சகலமும் வந்தவர்போல் வேடம் பூண்டு***
***சடைமுடியும் காசாயம் தன்னைச் சாற்றி***
***இகலுமனம் அடங்காமல் நினைவு வேறாய்***
***எண்ணமெலாம் பெண்ணாசை பூசை தானே*** *(16)*

*என்பது காண்க.*

**அவ்வையார் (14 ஆம் நூற்றாண்டு)**

*இப்பெயரில் நான்கிற்கு மேற்பட்டவர்கள் உள்ளனர். இங்கு நாம் குறிப்பிடும் அவ்வையார் சித்தர் கணங்களில் ஒருவர் கருவிலே திருவுடையவர், ஞான நாட்டமே கொண்டு வாழ்ந்தவர். மெய்கண்ட சாத்திரங்கள் தோன்றிய காலத்தையடுத்துத் தமிழ்நாட்டில் ஒரு பெரிய பக்தி வெள்ளம் இறை நினைவு என்ற பேராறு பெருக்கெடுத்து ஓடியது. அக்காலத்துத் தோன்றிய புலவர்கள் பலர் தாங்களும் இவ்வெள்ள மயமாகவே ஆயினர். அவ்வையாரும் இந்த நிலைக்கு விலக்கல்லார் பல காலத்திலிருந்த பல அவ்வையார் சரித்திரங்களோடு பிணைத்துள்ள செய்திகளையும் பாடல்களையும் சீர்தூக்கி ஆய்ந்தால் நாம் கருதும் அவ்வைக்கு உரியனவாக மூன்று தனிப்பாடல்களைத் தேர்ந்து கொள்ளலாம். அவற்றின் வரலாறுகள் மட்டும் நாம் குறிப்பிடும் அவ்வையாரோடு தொடர்பு கொண்டனவாய்க் கருதலாம்.*

*(அ) இரண்டு பாடல்களை மட்டிலும் ஈண்டு எடுத்துக் கொள்வோம். அவ்வையார் தம்மை மதியாத சங்கப் புலவர்களை நோக்கித் தம்முடைய ஐந்து விரல்களைக் குவித்தும் மூடியும் கொஞ்சம் திறந்தும் கட்டுவிரலொன்றை மட்டிலும் நீட்டியும் சில குறிகளைக் காட்டி "இவற்றிற்குப் பொருள் என்ன?" என்று வினவினார். அவர்கள் அவ்வையார் கருத்தை அறியாதவர்களாய், ஒரு பெண்ணின் நிலையை வருணித்து ஒரு வெண்பா சொல்லினர். அது கேட்ட அவ்வையார் நீங்கள் சொல்லியது தவறு என்ற அவர்கள் மனம் வருந்தி புழுங்கி வெட்கம் அடையும் படி.*

***ஐயம் இடுமின் அறநெறியைக் கைப்பிடிமின்***
***இவ்வளவேனும் அன்னம் இட்டுண்மின் - தெய்வம்***
***ஒருவனே என்றும் உணரவல் வீரேல்***
***அருவினைகள் ஐந்தும் அறும்.***

*என்ற வெண்பாவால் தாம் கருதிய பொருளை வெளியிட்டார்.*

*(ஆ) ஒருவர் ஊண், கல்வி, வீரம், காட்சி என்பவற்றுக்கு இலக்கணம் கேட்ட போது அவ்வையார் அடியிற் காணும் பாட்டைப் பாடி விளக்கம் அளித்தார்.*

***ஒன்றாகக் காண்பதே காட்சி, புலனைந்தும்***
***வென்றான் தன் வீரமே வீரமாம் - என்றும் தான்***
***சாவாதே கற்பதே கல்வி, தனைப்பிறர்***
***ஏவாமல் உண்பதே ஊண்.***

*உலக வாழ்க்கையில் சுதந்திரமாக இருந்த அவ்வையார் ஆன்ம சுதந்திரத்திற்காக இப்பாடல் பாடினார் என்பது பெரிதும் ஏற்கக் கூடியதே.*

*அவ்வை என்ற பெயரைச் சூழ்ந்து வழங்கும் கதைகளுள் இவை மட்டும் நாம் கருதுங்காலத்தில் வாழ்ந்த அவ்வையின் இயல்புக்குப் பொருந்துவனவாகலாம்.*

**ஏனாதிச் சித்தர்**

*ஏனாதி பண்டை நூல்களினால் படைத்தலைவனுக்குரியதொரு சிறப்புப் பட்டம் என்று அறிகின்றோம். ஆனால் பிற்காலத்தில் குலத்தால் இழிந்தவர் என்று அக்காலத்தார் கருதிய சில குலத்தாருக்கு உரிய சொல்லாக ஆகிவிட்டது. சித்தர்கள் தாழ்ந்த பொருள்களை முன்னிலைப் படுத்தி உரைக்கு முறைமையில் அப்பொருள்களுக்குப் பாடலில் ஓர்? (கேள்விக் குறி) பிறக்கின்றது. அதுபோல் இச்சித்தர் நாவிதர், வண்ணார் என்று பிற்காலத்தில் பொருள்படுகின்ற ஏனாதி என்ற சொல்லை முன்வைத்துப் பாடியதால் ஏனாதிக்குச் சிறப்பு உண்டாகின்றது.*

*இச்சித்தர் பாடியனவாகப் பத்துப்பாடல்கள் தொன்னூல் நிலையத்திலுள்ள ஓர் ஏட்டில் காணப்பெறுகின்றன. இவை அச்சுப்படிகளில் இல்லை. பாடல்கள் தாழிசை யாப்பால் அமைந்தவை. முற்பாதி சித்தர் கேட்கும் வினாவாகவும் பிற்பாதி ஏனாதி கூறும் விடையாகவும் அமைந்துள்ளன.*

***வேதாக மத்தின் விசும்பதனுள் புக்கு***
***மெய்கண்ட ஏனாதி, என் கொண்டு வந்தீர்?***

*போதாதி பேதச் சமயப் பிணக்கைப்*
*பிசைந்துள் ளடக்கும் வியன் கொண்டு வந்தேன்.*

**காளைச்சித்தர்**

*இவருடைய பாடல்கள் எட்டு. தொன்னூல் நிலையத்து எட்டுப் படிகளில் காணப்பெறுகின்றன. அச்சில் வரவில்லை இவர் காளையைப் பூட்டி உழவுகோலைக் கையில் கொண்டு ஏர் உழுது பயிர்த் தொழில் செய்வதாக ஞானப்பொருள்களை உருவகம் செய்து பாடுவதால் இப்பெயர் பெற்றது. ''காளச்சித்தர்'' என்றும் இவர் பெயர் வழங்கும் இவர்தம் பாடல்கள்,*

*எல்லாரும் கொல்லையுழ - என் தோழா*
*என்கணவன் பள்ள முழ*
*பள்ளம் பழுத்தளவோ - என் தோழா*
*பார்த்து வரப் பிள்ளையீரே*
*முன்னோரும் பின்னோரும் - என் தோழா*
*மூவணையும் ஓரணைதான்*
*முன்னோர் உழுதுவிட - என் தோழா*
*முகவெள்ளைக் காளையடா*
*சந்திரரும் சூரியரும் - என் தோழா*
*சந்திபண்ணும் பொய்கையிலே*
*இந்திரனை நோக்கியடா - என் தோழா*
*எடுத்தேன் உழக்கோலை*

**நந்தீத்தேவர்**

*இவர் பெயர் நந்தீகசுவரர் எனவும் வழங்கும். இவர் செய்த நூல்கள் யாவும் இரசவாதமே அபூர்வமாய் ஒன்று வைத்தியம். ஒன்று பூசாவிதி, பூசாவிதி என்பது 12 பாடல்களுடையது. எல்லாப் பாடல்களும் கேளப்பா, பாரப்பா என்றே தொடங்குவன. விக்கினேசர், சண்முகம், சிவம், தேவி விஷ்ணு பூசை சொல்லி, பின் ரேசகம், பூரகம், கும்பகம் பூசைகளும் சொல்கிறார். தேவி பூசைக்குரிய பாடலொன்று மட்டும் கேளப்பா என்று தொடங்கவில்லை. அப்பாடல் இது.*

*தானான சிவத்தினிடை பூசை சொன்னேன்*
*வன்மையுள்ள சத்தியுடை பூசை கேளு*
*வானான யிமடிமன்றுங் கும்ப கத்தில்*
*வட்டவள மாகவொரு மனதாய் நின்று*
*ஆனான கதம்பகத் தூரிபுஷ்பம் வைத்து*
*அப்பனே பால்பழங்கள் வஸ்து வைத்து*
*மானான தேவியைத் தான் தோத்த ரித்து*
*மைந்தனே சாஷ்டாங்கஞ் சாணம் பண்ணே.*

*இதிலுள்ள பாடல்கள் யாவும் அந்தாதித் துறையில் அமைந்துள்ளன.*

**துணை நூல்கள்**


1. மறைமலையடிகள், "சித்தர்கள் வரலாறு" மறைமலையடிகள் ஆராய்ச்சி அறக்கட்டளை.
2. பக்தி மார்க்கம் ஸ்ரீராமகிருஷ்ண மடம் ISBN: 978-8171200795.
3. சேக்கிழார் எழுதிய கிருபானந்த வாரியார் பெரிய புராணம் குகஸ்ரீ வாரியார் பதிப்பாகம் சென்னை.
4. பாலசுப்பிரமணியம் கே.எம். புனித மாணிக்கவாசகர் திருவாசகம் பழனியப்பா பிரதர்ஸ் சென்னை ISBN: 9788183796026.


## References


1. Maraimalai Adigal, "Siddhargal Varalaru" Maraimalai Adigal Research Foundation.
2. Bhakti Margam, Sri Ramakrishna Math, ISBN: 978-8171200795.
3. Kripananda Variyar Periya Puranam by Sekkilar, Guhashri Vaariyaar Pathippagam, Chennai.
4. Balasubramaniam, K.M., Tiruvachakam of Saint Manickavachakar, Palaniappa Brothers, Chennai, ISBN: 9788183796026.